[14th March 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கூட்டுறவு சங்கங்களின் மூலமாகத்தான் விற்பனை செய்யவேண்டுமென்ற நிபந்தனையை விதிப்பது சரியல்ல. விற்பனை செய்ய அவர்கள் முன் வந்தால் தனிச் சலுகை காட்டப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR: இந்தக் கருவிகளில் டிராக்டர்கள் தவிர விவசாயிகளுக்கு அனுகூலமான இதர கருவிகள் தயார் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது அதற்கு வேண்டிய உருக்கு, இரும்பு எல்லாம் கொஞ்சம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அதோடு விவசாய இலாகாவே இதை எடுத்து விநியோகிப்பது என்ற முறையும் இனி கவனிக்கப்படும். இது எல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது.

Agricultural schemes

*809 Q.—SRI A. VEDARATHNAM: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயத் திட்டம் வகுக்கப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு தாக்கீது பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா?

(இ) அதன் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) A copy of G.O. No. 3792, Food and Agriculture, dated 16th November 1960, containing the details[a] is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM: மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற எட்டில் ப்ரொடக்ஷன் ஆப் புட்க்ரெயின்ஸ் (production of foodgrains) 33% அதிகப்படுத்துவது என்றும், பெட்டர் பார்மிங் Better Farming மூலமாக 12½% என்றும், Further development of the use of Chemical Fertilisers 12½% என்றும், Further development of Irrigation facilities 8% என்றும் எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் நம்முடைய லட்சிய இலக்கு எவ்வளவாக இருந்தபோதிலும் போதுமான வசதி இல்லாத காரணத்தினால் அதை அடைய முடியவில்லை. இந்த எட்டிலேயே நான்காவது பக்கத்தில் குட்டை, குளங்கள் இதிலிருந்து தண்ணீர் இறைத்துக்கொள்வதற்கு வசதியாக பம்பு செட்டுகள்கூடக் கொடுப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் தனித்தனியாக இதைச் செய்வது சாத்தியம் இல்லை. அரசாங்கம் தான் இதைச் செய்ய வேண்டும். அவர்கள் எடுத்துக்கொண்ட திட்டத்தை பூர்த்தி செய்யவில்லை. விவசாய இலாகா எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லிவிட்டது. இப்படி இருக்கையில் இந்தத் திட்டத்தை குறிப்பிட்டபடி நிறைவேற்ற முடியும் என்று அரசாங்கம் கருதுகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் போட்டபடி ஈடேறவில்லை என்று சொல்வது சரியல்ல. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு தூரம் எதிர்பார்க்கப்படுகிறதோ, அவ்வளவு தூரம் நிறைவேற்ற அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. இதிலே 8% நீர்ப்பாசன வசதிகளை இன்னும் அதிகப்படுத்துவதனாலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்படும். தனித்தனியே விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு போதுமான முறையில் கவனம் செலுத்தப்படும் என்று கனம் அங்கத்தினர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

[a] Printed as Appendix III on pages 434-453 infra.